From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.221/21

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : பவானி | Father/Husband Name | : அருண் |
| Age | : | Calling | : |
| Date | : 03.02.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 03 day of 02.2026.

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது மேலூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.06.2021–ம் தேதி மாலை 5.20 மணிக்கு நான் மேலூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது பழனிமுருகன், வயது 42 என்ற நபரை அவரது மகனான ராஜ்குமார் என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அவரை நான் பரிசோதனை செய்து அப்போது அவருக்கு பின்வரும் காயங்கள் இருந்தது. Laceration 7x 6 x 5 cm நடு மண்டையில் இருந்தது. வேறு காயங்கள் எதுவும் இல்லை. பழனிமுருகன் மருத்துவமனையில் சுமார் 22.06.2021 முதல் 28.06.2021–ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். அவர் எனது சிகிச்சையின் போது தன்னை தெரிந்த மூன்று நபர்கள் கல் மற்றும் கட்டையை கொண்டு கல்லாபுரம் கடை அருகில் வைத்து தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதித்து அவருக்கு சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். (அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). பழனிமுருகனுக்கு ஏற்பட்ட காயம் கல் மற்றும் கட்டையை கொண்டு தாக்கினால் ஏற்படக்கூடிய காயம் தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பழனிமுருகன் என்பவரை யார் அழைத்து வந்தார் என்றால் பழனிமுருகனின் மகன் ராஜ்குமார் என்பவர் அழைத்து வந்தார். அ.சா.ஆ.3 காவல் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட விபரம் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் அனுமதித்த பின்னர் அவர் வாக்குமூலம் கொடுத்தாரா இல்லையா என்று அ.சா.ஆ.3–ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

அ.சா.ஆ.3–ல் பழனிமுருகனை தெரிந்த மூன்று நபர்கள் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வழங்கிய காயச்சான்றிதழில் காயத்தின் தன்மை நிறம், வயது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 12.07.2021–ம் தேதி விசாரித்தார். ஒரு நபர் தானாக தடுமாறி கீழே விழுந்தாலும் இது போன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் அடிதடி சண்டையிலும் இது போன்ற காயங்கள் ஏற்படலாம், கீழே விழுந்தாலும் இது போன்ற காயங்கள் ஏற்படலாம். அ.சா.ஆ.3–ல் கல்லாபுரம் கடை அருகே சண்டை ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.